Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 05.04.2026 / Script

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : ரோஷ்னா காசிம்**

தேதி : 05.04.2026 – ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------------------------------------

*தலைப்புச் செய்திகள்*

தமிழ்நாடு கேரளம் உள்ளிட்ட தென் மாநிலங்களில் மக்களவை எண்ணிக்கை குறைக்கப்படமாட்டாது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் கல்வித் தகுதி மற்றும் குற்றப்பின்னணிகள் குறித்து வாக்காளர்கள் இணையதள வசதிகள் மூலம் அறிந்து கொள்ளலாம் என இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இயேசு பிரான் உயிர்த்தெழுந்த திருநாளான ஈஸ்டர் பண்டிகை இன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

முழுமையான நல்வாழ்வுக்கு தியானம் ஒரு முக்கிய கருவி என்று குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மோடி கேர□ா 1 (19)

தமிழ்நாடு கேரளம் உள்ளிட்ட தென் மாநிலங்களில் மக்களவை எண்ணிக்கை குறைக்கப்படமாட்டாது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். அவர் நேற்றிரவு கேரள மாநிலத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்றுப் பேசினார். தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதில் அரசு சிறப்பாக செயல்பட்டதாகவும், மக்கள் தொகை குறைந்ததால் இடங்களும் குறையும் என சிலர் தவறான தகவல்களை பரப்பி வருவதாகவும் அவர் தெரிவித்தார். நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றங்களில் மகளிருக்கு 33 சதவிகிதம் இட ஒதுக்கீட்டை உறுதி செய்யும் சட்டம் தொடர்பாக, பட்ஜெட் கூட்டத்தொடர் மேலும் 3 நாட்களுக்கு, அதாவது 16, 17, 18 ஆகிய தேதிகள் நீட்டிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார். கேரள மாநிலத்தில் வாக்கு வங்கி அரசியலுக்காக இடதுசாரிகளும், காங்கிரசும், தீவிரவாத சக்திகளை ஊக்குவித்து வருவதாக அவர் குற்றம் சாட்டினார். அங்குள்ள சபரிமலை ரயில்வே திட்டம் இப்பகுதியில் புதிய வாய்ப்புகளை உருவாக்கும் என்றும் அவர் கூறினார். இது சபரிமலைக்கான நேரடி இணைப்பை மேம்படுத்துவதோடு உள்ளூர் வணிகர்களுக்கு வேகத்தை தந்து, இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளை வழங்கும் என்று கூறினார்.

ஆனால் இங்குள்ள மாநில அரசு இத்திட்டத்தை முடிக்காமல் கிடப்பில் போட்டுவிட்டதாக அவர் குற்றம் சாட்டினார்.

*மோடி கேர□ா 2 (18)*

இதனால் கேரளாவின் திருவல்லா பகுதி பெரும் பாதிப்பை சந்தித்து வருவதாக பிரதமர் குறிப்பிட்டார். பாஜக-வின் இரட்டை எஞ்சின் அரசு ஆட்சிக்கு வரும்போது இதுபோன்ற அனைத்து தடைகளும் நீக்கப்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார். தற்போது நிலவும் போர் சூழலைக் கவனத்தில் கொண்டு வளைகுடா நாடுகளின் தலைவர்களுடன் தாம் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார். வெளிநாடுகளிலுள்ள மகன்-மகள் மற்றும் உறவினர்கள், உங்களை விட்டு தொலைவில் இருந்தாலும் அவர்கள் தனிமையில் இல்லை என்பதை அனைத்து குடும்ப உறுப்பினர்களும் தெரிந்துகொள்ள வேண்டும் என அவர் கூறினார். அந்த நாடுகளில் வாழும் ஒவ்வொரு இந்தியர்களுடனும் அரசு எப்போதும் துணையாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். திருவல்லா பிரச்சாரத்தை முடித்துக்கொண்ட பின்னர் திரு. மோடி திருவனந்தபுரம் சென்று அங்கு வாகனப் பேரணியில் பங்கேற்றார். கேரளாவில் பாரதீய ஜனதா கட்சி, இடது சாரி கூட்டணி ஒரு புறமும், காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி ஒருபுறமும் தேர்தலில் போட்டியிடுகின்றன. இதற்கிடையே கேரள பிரச்சாரக் கூட்டத்திற்குச்

செல்லும் வழியில் தமிழக கட்சி நிர்வாகிகளுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி உயர்மட்ட ஆலோசனைக்கூட்டம் ஒன்றை நடத்தினார்.

*மோடி கேர□ா 3 (05 )*

இந்த கூட்டத்தில் தமிழக தேர்தல் பிரச்சாரம் குறித்தும், வெற்றி வாய்ப்புகள் குறித்த கள நிலவரம் குறித்தும் விவாதிக்கப்பட்டது. தமிழகத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி வருகிற 15ஆம் தேதி மீண்டும் தேர்தல் பிரச்சாரத்திற்கு வர இருப்பதால் தேர்தல் பிரச்சார யூகம் குறித்தும் இதில் விவாதிக்கப்பட்டது.

*தேர்தல் ஆணையம் (11 )*

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் கல்வித் தகுதி மற்றும் குற்றப்பின்னணிகள் குறித்து வாக்காளர்கள் இணையதள வசதிகள் மூலம் அறிந்து கொள்ளலாம் என இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இந்த இணையதளத்தை அணுகுவதன் மூலம் வாக்காளர்கள் மற்றும் வேட்பாளர்கள் சமர்ப்பித்த முழுமையான பிரமாண பத்திரத்தை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்றும், தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. தேர்தல் ஆணையத்தின் 40-க்கும் மேற்பட்ட இணையதள சேவைகளை ஒருங்கிணைத்து அனைத்து சேவைகளையும்

அளிக்கும் வகையில் ECI net platform அமைக்கப்பட்டுள்து, இது உலக அளவில் மிகப்பெரிய தேர்தல் சேவை இணையதளமாக கருதப்படுகிறது என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

*ஈஸ்டர் 1 (03 )*

இயேசு பிரான் உயிர்த்தெழுந்த திருநாளான ஈஸ்டர் பண்டிகை இன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இது குறித்த ஒரு செய்தி தொகுப்பு …

(வாய்ஸ்)

*ஈஸ்டர் 2 (18 )*

(வாய்ஸ்)

ஈஸ்டர் பண்டிகை இன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி பல்வேறு தேவாலயங்களில் இன்று சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெற்றன. இதில் ஏராளமான கிறிஸ்தவர்கள் பங்கேற்று வழிபாடு செய்தனர். ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு அனைவருக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக, அவர் தமது சமூக ஊடகப்பதிவில் ஈஸ்டர் பண்டிகை தினத்தில் நல்லிணக்கம், அமைதி மற்றும் சகோதரத்துவத்தை மேம்படுத்துவதற்காக நாம் அனைவரும் கூட்டாக செயல்படுவோம் என தெரிவித்துள்ளார்.

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள பதிவில், நாட்டு மக்களுக்கு அவர் ஈஸ்டர் தின வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை, அன்பு, தியாகம், மன்னிப்பு, பிறருக்கு சேவை செய்தல் போன்ற மாண்புகளைக் குறிப்பதாக தெரிவித்துள்ளார். வாய்மை, மனித நேயம் ஆகியவைகளைக் கடைபிடித்து அனைவரும் நல்வாழ்வை வாழ வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். சிலுவையில் அறையப்பட்ட இயேசுபிரான் உயிர்த்தெழுந்த 3ஆம் நாள் ஈஸ்டர் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

*ஈஸ்டர் 3 (13 )*

(வாய்ஸ்)

இதனையொட்டி தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள தேவாலயங்களில் சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெற்று வருகின்றன. இதில் ஏராளமான கிறிஸ்தவர்கள் பங்கேற்றுள்ளனர். பிரசித்தி பெற்ற வேளாங்கண்ணி ஆலயத்தில் நடைபெற்ற சிறப்பு ஈஸ்டர் பண்டிகை நிகழ்ச்சியில் லட்சக்கணக்கான கிறிஸ்தவர்கள் பங்கேற்றனர். இதில் இயேசு உயிர்த்தெழுந்த காட்சி தத்ரூபமாக நடத்திக் காண்பிக்கப்பட்டது.

ஈஸ்டர் பண்டிகையை ஒட்டி பிரதமர் திரு. நரேந்தி மோடி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் இந்த நாள் நம்பிக்கை மற்றும் புதுப்பித்தலைக் கொண்டாடி வருவதாக தெரிவித்துள்ளார். இந்த நாள் ஒவ்வொருவரின்

வாழ்க்கையிலும் அமைதி, மகிழ்ச்சி மற்றும் பிரகாசம் ஆகியவற்றை கொண்டுவரட்டும் என அவர் தெரிவித்துள்ளார். இயேசு பிரானின் போதனைகள் அனைவரையும் ஒற்றுமையுடன் ஊக்குவிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

*பிரதமர் கடல்சார் தினம் (1 )*

தேசிய கடல்சார் தினம் இன்று கொண்டாடப்படுகிறது. இது குறித்த கூடுதல் தகவல்கள்…

(வாய்ஸ்)

*பிரதமர் கடல்சார் தினம் (18 )*

(வாய்ஸ்)

தேசிய கடல்சார் தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி முக்கிய தலைவர்கள் பலர் கடல்சார் பணியாளர்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். பிரதமர் திரு. நரேந்திர மோடி, இத்துறையுடன் தொடர்புடைய அனைவரின் சேவையையும், பங்களிப்பையும் நாடு நினைவுகூர்வதாக தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர், தமது சமூக ஊடக தள செய்தியில், கடல்சார் துறையினரின் அர்ப்பணிப்பு நாட்டின் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் இணைப்பை வலுப்படுத்துகிறது என கூறினார். 21ஆம் நூற்றாண்டின் நவீன மற்றும் எதிர்கால் நோக்கம்

கொண்ட சட்டங்களை அரசு செயல்படுத்தியுள்ளதாக கூறினார். இந்த புதிய சட்டங்கள் மாநில கடல்சார் வாரியங்களுக்கு அதிகாரம் அளிப்பதோடு, துறைமுக நிர்வாகத்தில் டிஜிட்டல் மயமாக்கலை ஊக்குவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்திய கடல்சார் தினத்தையொட்டி மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வெளியிட்டுள்ள பதிவில் அனைத்து துறை பணியாளர்களுக்கும் தமது வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார். அமைதி அல்லது நெருக்கடி காலங்களில் நாட்டின் வளர்ச்சியை வழிநடத்துவதில் அவர்களின் பங்கு மிக முக்கியமானது என தெரிவித்துள்ளார். அவர்களின் அர்ப்பணிப்புக்கு தேசம் தலை வணங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

*ஜிதேந்திர சிங் (14 )*

மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் திரு.ஜிதேந்திர சிங் இன்று புதுடெல்லியில் சாதனா சப்தா திட்டத்தின் கீழ் இணையதளம் மற்றும் கர்மயோகி கர்த்தவ்ய காரியக்ரம் திட்டத்தை செயல்படுத்துவதற்கான முன்னெடுப்பு திட்டம் ஒன்றை தொடங்கி வைத்தார். அவர் தமது உரையில், ஊழியர்களின் திறன் மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கும் வகையில் மிஷன் கர்மயோகி 5 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளதாக தெரிவித்தார். இம்மாதம் 2ஆம் தேதி முதல், 8ஆம் தேதி வரை அனுசரிக்கப்படும் சாதனா சப்தா அரசு

அதிகாரிகளிடையே தொடர்ச்சியான கற்றல் கலாச்சாரத்தை வலுப்படுத்துவதையும், திறன் மேம்பாட்டை ஊக்குவிப்பதையும் நோக்கமாக கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார். நிகழ்ச்சியில் திறன் மேம்பாட்டு ஆணையத்திற்கும், வளரும் நாடுகளுக்கும் ஆராய்ச்சி மற்றும் தகவல் அமைப்பிற்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று இன்று கையெழுத்தானது.

*மினி மாராத்தான் (07)*

புதுடெல்லியில் இன்று காலை பஞ்சாப் நேஷனல் வங்கி மற்றும் இந்திய ஆயுதப்படை ஆகியவற்றுடன் இணைந்து மினி மராத்தான் போட்டி நடைபெற்றது. ஆப்ரேஷன் சிந்து நடவடிக்கையில் பங்கேற்ற வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இந்த ஓட்டம் புதுடெல்லியிலுள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இந்த மாராத்தான் போட்டியில் ஏராளமான மக்கள் மற்றும் ராணுவ வீரர்கள் கலந்து கொண்டனர்.

*தியானம் சி.பி.ராதாகிருஷ்ணன் (10 )*

முழுமையான நல்வாழ்வுக்கு தியானம் ஒரு முக்கிய கருவி என்று குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் இன்று நடைபெற்ற தியானத் தலைவர்கள் உலகளாவிய மாநாட்டில் அவர் பங்கேற்றுப் பேசினார். தியானம், மன அழுத்தத்தைக் குறைக்கவும், கவனத்தை மேம்படுத்தவும், உதவுகிறது என்று அவர் தெரிவித்தார். தியானம், பதற்றத்தைக் குறைத்து நுண் திறமையை அதிகரிப்பதாக அவர் கூறினார். அமைதியான உள்ளமும் சுய பரிசோதனையும் வாழ்க்கைக்கு மிக அவசியம் என்று அவர் தெரிவித்தார். உன்னிப்பாக பதிலளிக்கும் திறனை வளர்ப்பதில் தியானம் ஒரு முக்கிய பங்கு வகிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

*ஜெகஜீவன்ராம் (15 )*

முன்னாள் துணை பிரதமர் பாபு ஜெகஜீவன் ராமின் பிறந்த தினத்தை முன்னிட்டு, பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா, பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் அவருக்கு மரியாதை செலுத்தினர். இது தொடர்பாக பிரதமர் திரு. வெளியிட்டுள்ள பதிவில், பாபு ஜெகஜீவன் ராம் தமது வாழ்வில் சமத்துவம் மற்றும் சமூக நீதிக்காக தன்னை அர்ப்பணித்ததாக தெரிவித்துள்ளார். அவர் நாட்டுக்காக அளித்த மதிப்பு மிக்க இந்த பங்களிப்பு எப்போதும்

நினைவுகூரப்பட்டது என்றும் பிரதமர் தெரிவித்தார். மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், பாபு ஜெகஜீவன்ராம் இந்திய சுதந்திரத்திற்காக பெருமளவு பங்களிப்பை வழங்கியதாகவும், அவரது இந்த அர்ப்பணிப்பு இன்றும் நினைவுகூரப்படுவதாக அவர் தெரிவித்தார். நலிவடைந்த மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக அவர் மேற்கொண்ட போராட்டம் இளைய தலைமுறையினரை தொடர்ந்து ஊக்குவிக்கும் என்றும் அவர் கூறினார்.

*திருமாவ□வன் தேர்தல் பரப்புரை (09)*

புதுச்சேரி உழவர்கரை தொகுதியில் போட்டியிடும் விடுதலை சிறுத்தைகள் கட்சி வேட்பாளர் திருமதி புஷ்பலதாவை ஆதரித்து அக்கட்சி தலைவர் திரு. திருமாவளவன் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். அவர் இன்று மங்கலம், திருபுவனை, வில்லியனூர் உள்ளிட்ட பகுதிகளில் வாக்கு சேகரித்தார். பின்னர் புதுச்சேரியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தனது தேர்தல் சுற்றுப்பயணம் இம்மாதம் 14ஆம் தேதி வரை நடைபெறும் என்றும், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் காங்கிரஸ்-திமுக கூட்டணி வெற்றி பெறும் என்றும் வெறுப்பு அரசியலுக்கு இடமில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

*மாஹே (11)*

புதுவைப்பகுதி மாஹேயில் போட்டியிடும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் திரு. ரமேஷை ஆதரித்து, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரும், கர்நாடக மாநிலத்தின் துணை முதலமைச்சருமான திரு. டி.கே. சிவகுமார் இன்று மாஹேயில் பொதுக்கூட்டம் ஒன்றில் உரையாற்றினார். அவர் தமது உரையில் புதுச்சேரி மற்றும் கேரளாவில் உள்ள அரசுகள் அனைத்து துறைகளிலும் சிக்கலான நெருக்கடியை உருவாக்கியுள்ளதாகவும், மக்கள் நலன் சார்ந்த எந்த திட்டங்களையும் செயல்படுத்த முடியவில்லை என்றும் குற்றம் சாட்டியுள்ளார். காங்கிரஸ் ஆட்சிக்க வந்தால் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

தமிழ்நாடு கேரளம் உள்ளிட்ட தென் மாநிலங்களில் மக்களவை எண்ணிக்கை குறைக்கப்படமாட்டாது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் கல்வித் தகுதி மற்றும் குற்றப்பின்னணிகள் குறித்து வாக்காளர்கள் இணையதள வசதிகள் மூலம் அறிந்து கொள்ளலாம் என இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இயேசு பிரான் உயிர்த்தெழுந்த திருநாளான ஈஸ்டர் பண்டிகை இன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

முழுமையான நல்வாழ்வுக்கு தியானம் ஒரு முக்கிய கருவி என்று குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது RM/RK/VM